தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 64/பேரூ/2021

நாள் 22.11.2021

திரு. சிவபெருமாள்,
மூலைகரைப்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, கதவு எண்.13E முத்துவீரப்பபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. சிவபெருமாள் என்பவரின் 29.06.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.7.2021ல் பெறப்பட்டு 64/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, கதவு எண்.13E முத்துவீரப்பபுரம் என்ற முகவரியில் வசிக்கும் சிவபெருமாள் என்பவர் தமது 29.6.2021 நாளிட்ட மனுவில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 8–வது வார்டு முத்துவீரப்பபுரத்தில் 250 வீடுகளும், 950 மக்களும் வசித்துவரும் நிலையில் தங்கள் ஊருக்கு குடிநீர் வேண்டி செயல் அலுவலரிடம் பலமுறை முறையிட்டும் ஒவ்வொரு முறையும் தட்டிக்கழித்துவருவதாகவும், இதேமாதிரி பாலம் வேலை நடைபெற்ற மூலைக்கரைப்பட்டி கஸ்பாவில் ஒரே நாளில் மாற்றுக் குழாய் அமைத்து குடிநீர் வழங்கிய செயல் அலுவலர் தங்கள் வார்டுக்கு குடிநீர் வழங்காதது தங்களை வஞ்சிக்கும்

செயலாகுமெனவும் குறிப்பிட்டுள்ளார். ஒருவருடம் ஆகியும் குடிநீர்வர எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தங்கள் பகுதி மக்கள் பேரூராட்சி கிணற்று போர் தண்ணீரை பயன்படுத்தி வருகிறார்கள். அந்த கிணறும் மூடி இல்லாமல் புறா போன்ற பறவைகள் கிணற்றில் விழுந்து இறந்து விடுகிறது. அதை செயல் அலுவலரிடம் சொல்லியும் அகற்றப்படாமல் நீரானது துர்நாற்றம் வீசுகிறது. அதை குடிக்கவும், வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தியும் வருகிறோம். ஆற்றுக் குடிநீர் வேண்டுமெனில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கிராம பஞ்சாயத்துக்குச் சென்று குடிநீர் எடுத்து வருகிறோம். பெண்கள் அருகில் உள்ள கிராமத்திற்குச் செல்ல பாதுகாப்பு இல்லை. அடிக்கடி தண்ணீர் வரவில்லை என்று சொல்லும்போது செயல் அலுவலர் இதுமட்டுமா வேலை வேற வேலை இல்லையா என்று தரக்குறைவாக பேசுகிறார். ஆகையால், தங்கள் ஊருக்கு ஆற்றுக் குடிநீர் வழங்கிட விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினைப் பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார். மேலும், தங்கள் ஊருக்கு ஆற்றுக்குடிநீர் வழங்க நடவடிக்கை வேண்டி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 26.4.2021ல் அளித்த புகார் மனுவின் நகலையும் இணைத்தனுப்பியுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 1.9.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி குடிநீர் திட்ட பைப்லைன்கள் செல்லும் இடங்களில் பொதுபணித்துறை மூலம் நதிநீர் இணைப்புத் திட்டத்திற்காக கால்வாய்/பாலம் அமைத்தல் பணி நடைபெறும்போது குடிநீர் திட்ட பைப்லைன்கள் தற்காலிகமாக சர்வீஸ் ரோடு வழியாக மாற்றி அமைக்கப்பட்டது என்றும், அப்போது 8–வது வார்டு முத்துவீரப்பபுரம் பகுதிக்கு ஆற்றுக் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது என்றும், பாலம் அமைக்கும் பணி தற்போது முடிவுற்றதால், குடிநீர் திட்ட பைப்லைன்களை சரியான பாதையில் அமைக்க மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பெருமாள் நகர் முதல் அச்சம்பாடு, திருநெல்வேலி மெயின் ரோடு (ஜெயம் திருமண மண்டபம் அருகில்), சின்னமூலக்கரை, மூலைக்கரைப்பட்டி–முனைஞ்சிப்பட்டி சாலை (ஆசிரியர் பயிற்சி பள்ளி கீழ்புறம்) பெருமாள்நகர் பேருந்து நிறுத்தம் வடக்குப் பக்கம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பம்பிங் மெயின் லைன் மற்றும் குடிநீர் திட்ட விநியோக குழாயை மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.3.80 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தனி அலுவலரின் அனுமதி பெற்று, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. காளிமுத்து என்கிற ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை 24.6.2021 அன்று வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

3. ஒப்பந்ததாரர் மேற்படி பணியை துவங்கி செய்துகொண்டு இருந்தபோது, அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால், சின்னமூலக்கரை, மூலைக்கரைப்பட்டி, முனைஞ்சிப்பட்டி சாலை (ஆசிரியர் பயிற்சி பள்ளி கீழ்புறம்) பெருமாள்நகர் பேருந்து நிறுத்தம் வடக்குப் பக்கம் ஆகிய இடங்களில் பைப்லைன் மாற்றி அமைக்கும் பணி முடிவடையாமல் உள்ளது என்றும், மூலைக்கரைப்பட்டி முனைஞ்சிப்பட்டி சாலையில் பைப்லைன்களை மாற்றி அமைக்கும் பணி முடிவடையாததால், முத்துவீரப்பபுரம் பகுதிக்கு ஆற்று குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை என்றும், தற்போது அப்பகுதிக்கு போர் மூலம் 15,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம்

குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறதாகவும், பைப்லைன் மாற்றி அமைக்கும் பணி விரைவில் முடிக்கப்பட்டு, அப்பகுதிக்கு சீரான ஆற்றுக் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 11.11.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 5.11.2021 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் முத்துவீரப்பபுரம் என்கின்ற இடத்தில் பாலம் கட்டப்பட்டதால், பைப்லைனில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது பாலம் கட்டும் பணி நிறைவுற்றதால், புதிய பைப்லைன் அமைக்கும்பணி முடிவடைந்தவுடன் இம்மாத இறதிக்குள் சீரான குடிநீர் அப்பகுதிக்கு வழங்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான எனது 9.11.2021 நாளிட்ட விளக்கத்தினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 09.11.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனுமீது 1.9.2021 நாளிட்ட அறிக்கையில் அதே விவரங்களையே திரும்ப குறிப்பிட்டுள்ளதோடு, பால வேலைகள் நடைபெற்றதால் அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளி முதல் முத்துவீரப்பபுரம் வரையிலான 2.5 கி.மீ தொலைவில் சில இடங்களில் குடிநீர் குழாய்கள் உடைந்து தண்ணீர் செல்வது தடைபடுவது கண்டறியப்பட்டு, சரிசெய்யப்பட்டு வருவதாகவும், விரைவில் முத்துவீரப்பபுரம் பகுதிக்கு சீரான ஆற்றுக் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணம் மற்றும் மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது விளக்க அறிக்கை, வாக்குமூலம், அவரது 9.11.2021 நாளிட்ட கூடுதல் அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. 11.11.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜரான மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் தற்போது பாலம் கட்டும் பணி நிறைவுற்றதால், புதிய பைப்லைன் அமைக்கும்பணி முடிவடைந்தவுடன் இம்மாத இறுதிக்குள் சீரான குடிநீர் விநியோகம் 8–வது வார்டு முத்துவீரப்பபுரத்திற்கு வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளவாறு, மனுதாரரது கோரிக்கையான முத்துவீரப்பபுரத்திற்கு ஆற்றுக்குடிநீர் வழங்கிட துரித நடவடிக்கையினை மேற்கொண்டு அப்பகுதிக்கு 15 நாட்களுக்குள் ஆற்றுக்குடிநீர் வழங்கிடுமாறு மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

பைப்லைன் பணிகள் முடிந்து முத்துவீரப்பபுரம் பகுதிக்கு ஆற்றுக்குடிநீர் வழங்கப்பட்டது என்பதற்கான அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறும் மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். தவறும்பட்சத்தில் மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– XXXXX
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. சிவபெருமாள்,
கதவு எண்.13E, முத்துவீரப்பபுரம்,
மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்–627 354.

பேரூராட்சிகளின் ஆயைாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

இணைஇயக்குநர், (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்–627 354

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

29/11/21

செயலாளர்

29.11.21